திருவெண்ணெய்நல்லூர் பேரூரில் உழவர் சந்தை அமைக்கும் இடத்தினை தேர்வு செய்வது குறித்து மாண்புமிகு முன்னாள் அமைச்சர் முனைவர் க.பொன்முடி எம்.எல்.ஏ. ஆய்வு செய்தார். மாவட்ட ஆட்சியர் ஷேக் அப்துல் ரகுமான் , மாவட்ட ஊராட்சி குழு தலைவர் ம. ஜெயச்சந்திரன், ஒன்றிய செயலாளர் பி.வி.ஆர்.சு.விசுவநாதன், ஒன்றிய குழு தலைவர் ஓம்.சிவ.சக்திவேல் பொதுக்குழு உறுப்பினர் பக்தவத்சலம், பேரூராட்சி மன்றத் தலைவர் அஞ்சுகம் கணேசன், பேரூர் செயலாளர் பூக்கடை கணேசன், துணைத் தலைவர்கள் கோமதி நிர்மல் ராஜ், ஜோதி, முன்னாள் துணை தலைவர் சரவணகுமார், இலக்கிய அணி விஜயபாபு, தகவல் தொழில்நுட்ப அணி கிருஷ்ணராஜ் உள்ளிட்ட விவசாய பெருமக்கள் பலர் கலந்து கொண்டனர்.

சேலம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாவட்ட வளர்ச்சி, ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்பு குழுக்கூட்டம், குழுத்தலைவர் மற்றும் சேலம் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.செல்வகணபதி தலைமையில், மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி, முன்னிலையில் நேற்று (16.05.2025) அனைத்துத்துறை அரசு அலுவலர்களுடனான ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. உடன் சேலம் மாநகராட்சி மேயர் ஆ.இராமச்சந்திரன், தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர் அ.மணி, கள்ளக்குறிச்சி நாடாளுமன்ற உறுப்பினர் தே.மலையரசன், நாமக்கல் நாடாளுமன்ற உறுப்பினர் வி.எஸ்.மாதேஸ்வரன், மேட்டூர் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.சதாசிவம், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) நே.பொன்மணி, மாவட்ட வன அலுவலர் கஷ்யப் ஷஷாங் ரவி, மாவட்ட வருவாய் அலுவலர் இரா.ரவிக்குமார், மாநகராட்சி ஆணையாளர் மா.இளங்கோவன், துணை மேயர் திருமதி மா.சாரதாதேவி மற்றும் அனைத்துத்துறை அலுவலர்கள் உள்ளனர்.

திருப்பத்தூர் மாவட்டம்

ஆலங்காயம் கிழக்கு, ஆலங்காயம் மத்திய, ஆலங்காயம் மேற்கு - திருப்பத்தூர் கிழக்கு, திருப்பத்தூர் வடக்கு, திருப்பத்தூர் மேற்கு, திருப்பத்தூர் தெற்கு, கந்திலி தெற்கு ஆகிய ஒன்றியங்களில் அடங்கியுள்ள ஊராட்சிகள் விவரம் மற்றும் வாணியம்பாடி கிழக்கு, மேற்கு - ஆம்பூர் மேற்கு, கிழக்கு ஆகிய நகரங்களில் அடங்கியுள்ள வார்டுகள் விவரம் பிரிக்கப்பட்ட ஒன்றிய, நகரக் கழகப் பொறுப்பாளர் நியமனம்!

தலைமைக் கழகம் அறிவிப்பு!

2026ஆம் ஆண்டில் நடைபெற உள்ள சட்டமன்றத் தேர்தலை எதிர்கொள்ளும் வகையில், கழகத்தில் மேற்கொள்ள வேண்டிய மாறுதல்கள் - அமைப்பு ரீதியான சீரமைப்புகளை மாண்புமிகு கழகத் தலைவருக்கும் - தலைமைக்கும் பரிந்துரைக்கவும், தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் **தலைவர்** அவர்கள் அமைத்த **"தி.மு.க. ஒருங்கிணைப்புக்குழு"** ஆலோசித்து எடுத்த முடிவின்படி,

கழக நிர்வாக வசதிக்காகவும் - கழகப் பணிகள் செவ்வனே நடைபெற்றிடவும் திருப்பத்தூர் மாவட்டத்திற்குட்பட்ட, ஆலங்காயம் கிழக்கு-மேற்கு, திருப்பத்தூர் கிழக்கு-மேற்கு, கந்திலி தெற்கு ஒன்றியம் ஆகிய 5 ஒன்றியங்கள், **ஆலங்காயம் கிழக்கு, ஆலங்காயம் மத்திய, ஆலங்காயம் மேற்கு – திருப்பத்தூர் கிழக்கு, திருப்பத்தூர் வடக்கு, திருப்பத்தூர் மேற்கு, திருப்பத்தூர் தெற்கு, கந்திலி தெற்கு** ஆகிய 8 ஒன்றியக் கழகங்களாக பிரிக்கப்பட்டு, அவ்வாறு பிரிக்கப்பட்ட ஒன்றியங்களுக்கு கழகப் பொறுப்பாளர்கள் நியமிக்கப்படுவதோடு;

வாணியம்பாடி, ஆம்பூர் ஆகிய இரண்டு நகரங்கள் **வாணியம்பாடி கிழக்கு, வாணியம்பாடி மேற்கு – ஆம்பூர் மேற்கு, ஆம்பூர் கிழக்கு** ஆகிய 4 நகரக் கழகங்களாக பிரிக்கப்பட்டு, அவ்வாறு பிரிக்கப்பட்ட நகரங்களுக்கு கழகப் பொறுப்பாளர்கள் நியமிக்கப்படுகிறார்கள்.

மேற்கண்டவாறு பிரிக்கப்பட்ட **ஆலங்காயம் கிழக்கு, ஆலங்காயம் மத்திய, ஆலங்காயம் மேற்கு – திருப்பத்தூர் கிழக்கு, திருப்பத்தூர் வடக்கு, திருப்பத்தூர் மேற்கு, திருப்பத்தூர் தெற்கு, கந்திலி தெற்கு** ஆகிய ஒன்றியங்கள் பின்வரும் ஊராட்சிகள் கொண்டதாகவும் - **வாணியம்பாடி கிழக்கு, வாணியம்பாடி மேற்கு – ஆம்பூர் மேற்கு, ஆம்பூர் கிழக்கு** ஆகிய நகரங்கள் பின்வரும் வார்டுகள் கொண்டதாகவும் அமையும்.

ஆலங்காயம் கிழக்கு ஒன்றியம்: 1. பீமகுளம், 2. மரிமாணிகுப்பம், 3.மிட்டூர், 4. பூங்குளம், 5. நரசிங்கபுரம், 6.பெரியகுரும்பத்தெரு, 7.நாய்க்கனூர், 8. ரெட்டியூர் ஆகிய 8 ஊராட்சிகள்.

ஆலங்காயம் மத்திய ஒன்றியம் : 1. வெள்ளக்குட்டை, 2.பெத்தவேப்பம்பட்டு, 3. கோவிந்தாபுரம், 4. தேவஸ்தானம், 5.ஜாப்ராபாத், 6. கொத்தக்கோட்டை, 7. விஜிலாபுரம், 8.நெக்னாமலை (பகுதி) பாகம்-1), 9.நிம்மியம்பட்டு, 10.வளையாம்பட்டு, 11. வள்ளிப்பட்டு, 12.ஈச்சங்கால் ஆகிய 12 ஊராட்சிகள் மற்றும் ஆலங்காயம் பேரூர்.

ஆலங்காயம் மேற்கு ஒன்றியம் : 1. வெலதிகமானிபெண்டா, 2.இளையநகரம், 3. கிரிசமுத்திரம், 4. சம்மந்திக்குப்பம், 5.கொல்லகுப்பம், 6. மதனாஞ்சேரி, 7. பள்ளிப்பட்டு, 8.நெக்னாமலை (புருஷோத்தகுப்பம்) ஆகிய 8 ஊராட்சிகள்.

திருப்பத்தூர் கிழக்கு ஒன்றியம் : 1. ஆண்டியப்பனூர், 2.இருணாப்பட்டு, 3. குரிசிலாப்பட்டு, 4. பள்ளவள்ளி, 5.பெருமாப்பட்டு ஆகிய 5 ஊராட்சிகள்.

திருப்பத்தூர் வடக்கு ஒன்றியம் : 1. அச்சமங்கலம், 2.மேல்அச்சமங்கலம், 3. கதிரிமங்கலம், 4. பூரிகமாணிமிட்டா, 5.அண்ணாண்டப்பட்டி, 6. கருப்பனூர், 7. பால்நாங்குப்பம், 8.வெங்காயப்பள்ளி ஆகிய 8 ஊராட்சிகள்.

திருப்பத்தூர் மேற்கு ஒன்றியம் : 1. புதூர்நாடு, 2. அகரம், 3.கதிரம்பட்டி, 4. செலந்தம்பள்ளி, 5. டி.கிருஷ்ணாபுரம், 6.மாடப்பள்ளி, 7. புதுக்கோட்டை, 8. நெல்லிவாசல்நாடு, 9.புங்கம்பட்டுநாடு, 10. சின்னசமுத்திரம், 11. குரும்பகேரி ஆகிய 11 ஊராட்சிகள்.

திருப்பத்தூர் தெற்கு ஒன்றியம் : 1. ஜம்மணபுதூர், 2. மோட்டூர்.ஏ.கே., 3. திம்மணாமுத்தூர், 4. பொம்மிகுப்பம், 5.தாதனவலசை, 6.காக்கணாம்பாளையம், 7. கொடுமாம்பள்ளி, 8. அனேரி, 9.இராச்சமங்கலம், 10. சௌடேகுப்பம் ஆகிய 10 ஊராட்சிகள்.

கந்திலி தெற்கு ஒன்றியம்: 1. சின்னகந்திலி, 2. கெஜல்நாயக்கன்பட்டி, 3. கந்திலி, 4. மண்டலநாயனகுண்டா, 5. பெரியகரம், 6. தோக்கியம் ஆகிய 6 ஊராட்சிகள்.

ஒன்றியக் கழகப் பொறுப்பாளர்கள் நியமனம்

மேற்கண்டவாறு பிரிக்கப்பட்ட **ஆலங்காயம் கிழக்கு, ஆலங்காயம் மத்திய, ஆலங்காயம் மேற்கு – திருப்பத்தூர் கிழக்கு, திருப்பத்தூர் வடக்கு, திருப்பத்தூர் மேற்கு, திருப்பத்தூர் தெற்கு, கந்திலி தெற்கு** ஆகிய ஒன்றியங்களில் கழகப் பணிகள் செவ்வனே நடைபெற, ஒன்றியக் கழகப் பொறுப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

ஆலங்காயம் கிழக்கு ஒன்றியம்: பொறுப்பாளர் : **எஸ். தாமோதரன்,** திருப்பத்தூர் மாவட்டம்.
ஆலங்காயம் மத்திய ஒன்றியம்: பொறுப்பாளர் : **வி.ஜி. அன்பு,** திருப்பத்தூர் மாவட்டம்.
ஆலங்காயம் மேற்கு ஒன்றியம்: பொறுப்பாளர் : **வி. ஞானவேலன்,** திருப்பத்தூர் மாவட்டம்.
திருப்பத்தூர் கிழக்கு ஒன்றியம்: பொறுப்பாளர் : **கே.ஆர். திருப்பதி,** திருப்பத்தூர் மாவட்டம்.
திருப்பத்தூர் வடக்கு ஒன்றியம்: பொறுப்பாளர் : **ஏ.சி. சுரேஷ்குமார்,** திருப்பத்தூர் மாவட்டம்.
திருப்பத்தூர் மேற்கு ஒன்றியம்: பொறுப்பாளர் : **ஏ. நல்லதம்பி**, திருப்பத்தூர் மாவட்டம்.
திருப்பத்தூர் தெற்கு ஒன்றியம்: பொறுப்பாளர் : **எம்.இராஜேந்திரன்**, திருப்பத்தூர் மாவட்டம்.
கந்திலி தெற்கு ஒன்றியம்: பொறுப்பாளர் : **எஸ்.கே.டி. அசோக்குமார்**, திருப்பத்தூர் மாவட்டம்.

வாணியம்பாடி கிழக்கு நகரம் : 1, 2, 3, 4, 5, 6, 10, 11, 12, 13, 14, 15, 16, 30, 31, 32, 33, 34, 35, 36 ஆகிய 20 வார்டுகள்.

வாணியம்பாடி மேற்கு நகரம் : 7, 8, 9, 17, 18, 19, 20, 21, 22, 23, 24, 25, 26, 27, 28, 29 ஆகிய 16 வார்டுகள்.

ஆம்பூர் மேற்கு நகரம் : 1, 2, 3, 4, 5, 6, 7, 8, 9, 10, 11, 12, 13, 14, 15, 16, 17, 18 ஆகிய 18 வார்டுகள்.

ஆம்பூர் கிழக்கு நகரம் : 19, 20, 21, 22, 23, 24, 25, 26, 27, 28, 29, 30, 31, 32, 33, 34, 35, 36 ஆகிய 18 வார்டுகள்.

நகரக் கழகப் பொறுப்பாளர்கள் நியமனம்

மேற்கண்டவாறு பிரிக்கப்பட்ட **வாணியம்பாடி கிழக்கு, வாணியம்பாடி மேற்கு, ஆம்பூர் மேற்கு, ஆம்பூர் கிழக்கு** ஆகிய நகரங்களில் கழகப் பணிகள் செவ்வனே நடைபெற, நகரக் கழகப் பொறுப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

வாணியம்பாடி கிழக்கு நகரம்: பொறுப்பாளர் : **வி.எஸ்.சாரதி,** வாணியம்பாடி, திருப்பத்தூர் மாவட்டம்.
வாணியம்பாடி மேற்கு நகரம்: பொறுப்பாளர் : **கயாஸ் அகமது,** வாணியம்பாடி, திருப்பத்தூர் மாவட்டம்.
ஆம்பூர் மேற்கு நகரம்: பொறுப்பாளர் : **எம்.ஆர். ஆறுமுகம்,** ஆம்பூர், திருப்பத்தூர் மாவட்டம்.
ஆம்பூர் கிழக்கு நகரம்: பொறுப்பாளர் : **சபீர் அகமது,** ஆம்பூர், திருப்பத்தூர் மாவட்டம்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 15.05.2025

துரைமுருகன்
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

விழுப்புரம் தெற்கு மாவட்ட இளைஞர் அணி ஆலோசனைக் கூட்டம்!

மாவட்டப் பொறுப்பாளர் பொன்.கௌதமசிகாமணி அறிக்கை!

விழுப்புரம், மே 17 - விழுப்புரம் தெற்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளர் டாக்டர் பொன். கௌதமசிகாமணி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

விழுப்புரம் (தெற்கு) மாவட்ட இளைஞர் அணி ஆலோசனைக் கூட்டம் திருக்கோவிலூர் சட்டப் பேரவைத் தொகுதி இளைஞர் அணி பாக முகவர்கள் ஆலோசனைக் கூட்டம் நாளை (18.05.2025 - ஞாயிற்றுக்கிழமை) மாலை 3 மணிக்கு திருக்கோவிலூர் செவலை ரோடு B.G.S. திருமண மண்டபத்தில் நடைபெற உள்ளது.

மாவட்ட கழக பொறுப்பாளர் டாக்டர் பொன். கௌதமசிகாமணி தலைமையில் நடைபெற உள்ள இக்கூட்டத்தில் கழக உயர் நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர், திருக்கோவிலூர் சட்டப்பேரவை உறுப்பினர் முனைவர் க. பொன்முடி , மாநில இளைஞர் அணி துணை செயலாளர் ப.அப்துல் மாலிக், திருக்கோவி லூர் தொகுதி தலைமைக் கழக பொறுப்பாளர் ஜி.கார்த்திகேயன் கலந்துகொண்டு சிறப்புரையாற்றுகின்றனர்.

சட்டப்பேரவை உறுப்பினர் அன்னியூர் அ.சிவா , மாவட்ட அவைத் தலைவர் ம.ஜெயச்சந்திரன், மாவட்ட துணை செயலாளர்கள் டி. என். முருகன் , இரா. கற்பகம், ஆகியோர் முன்னிலையில் நடைபெற உள்ள இந்நிகழ்வில் விழுப்புரம் (தெற்கு) மாவட்டத்திற்கு உட்பட்ட மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர்க் கழக இளைஞர் அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், திருக்கோவிலூர் சட்டப்பேரவைத் தொகுதிக்கு உட்பட்ட ஒன்றிய, நகர, பேரூர்க் கழக செயலாளர்கள் , திருக்கோவிலூர் சட்டப்பேரவைத் தொகுதியில் பாக முகவர்களாக உள்ள இளைஞர் அணியினர் , திருக்கோவிலூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட தலைமைச் செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்கள் அனைவரும் கலந்து கொள்ள கேட்டுக்கொள்கிறேன்

பொருள் :

இளைஞர் அணி ஆக்கப் பணிகள்

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

ஒன்றியச் செயலாளர் ரவிச்சந்திரன் தலைமை! அரசின் சாதனைகளை விளக்கி

மரக்காணம் மத்திய ஒன்றியத்தில் பொதுக் கூட்டம்! ரூ.5 லட்சத்தில் நல உதவிகள்!

மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. வழங்கினார்!

மரக்காணம், மே 17 - மரக்காணம் மத்திய ஒன்றிய திமுக சார்பில் பெருமுக்கல்ஊராட்சியில் ஒன்றிய செயலாளர் ரவிச்சந்திரன் தலைமையில் நடைபெற்ற"நாடு போற்றும் நான்காண்டு தொடரட்டும் பல்லாண்டு" சாதனை விளக்கப் பொதுக் கூட்டத்தில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட பொதுமக்களுக்கு ரூபாய் 5 லட்சம் மதிப்புள்ள நலத்திட்ட உதவிகளை விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. வழங்கினார்.

விழுப்புரம் வடக்கு மாவட்டம்திண்டிவனம் சட்டமன்ற தொகுதி மரக்காணம் மத்திய ஒன்றிய திமுக சார்பில் "நாடு போற்றும் நான்காண்டு தொடரட்டும் பல்லாண்டு" சாதனை விளக்கப் பொதுக் கூட்டம் பெருமுக்கல் கூட்டு சாலையில்நடைபெற்றது.

நிகழ்ச்சிக்குமரக்காணம் மத்திய ஒன்றிய செயலாளர் வ.ரவிச்சந்திரன் தலைமை தாங்கினார்.

ஒன்றிய நிர்வாகிகள் எஸ்.ரவிச்சந்திரன், செல்வம், சுமதி பார்த்தசாரதி, சுரேஷ் குமார், ரவிசங்கர், பிரபு, சங்கர் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாவட்டப் பிரதிநிதிகள் வடிவேலு, ஆதிகேசவன் ஆகியோர் அனைவரையும் வரவேற்றனர்

கூட்டத்தில் தலைமைக் கழக பேச்சாளர் தாம்பரம் ஏகாம்பரம், மாவட்ட பொறுப்பாளரும், செஞ்சி தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான செஞ்சி மஸ்தான் ஆகியோர் கலந்து கொண்டு திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனைகளை எடுத்துரைத்தனர்.

இதைத் தொடர்ந்து மாவட்ட பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. கழக அரசின் நான்காண்டு சாதனைகள் குறித்த துண்டு பிரசுரங்களைபொதுமக்களிடம் வழங்கினார்.

தொடர்ந்து மரக்காணம் மத்திய ஒன்றிய செயலாளர் வ.ரவிச்சந்திரன் ஏற்பாட்டில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட நபர்களுக்கு 5 லட்சம் ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. வழங்கினார்.

கூட்டத்தில் மாவட்ட அவைத் தலைவர் டாக்டர் சேகர், மாவட்ட பொருளாளர் ரமணன், மாவட்ட துணை செயலாளர் ரவிக்குமார், மரக்காணம் மேற்கு ஒன்றிய செயலாளர் பழனி, முன்னாள் மாவட்ட துணை செயலாளர் வழக்கறிஞர் அசோகன்,ஒன்றிய குழு உறுப்பினர்கள் ஊராட்சி மன்ற தலைவர்கள் ,பெருமுக்கள் கிளை கழக நிர்வாகிகள் சீதாராமன், அரிகிருஷ்ணன், முருகானந்தம், விஜயகுமார், சிவராமன், பழனி, ராதா, பாலமுருகன், சிவக்குமார், ராமகிருஷ்ணன், பிரகாஷ், தேவா, செந்தில், அருள், செல்வதுரை, அன்பு, சதீஷ், பாரதியார், மோகன், ஆறுமுகம், கலையரசன், வெற்றிவேல், சுரேஷ், ராஜேஷ், அருண், வெங்கடேசன், உதயகுமார், விக்கி, செந்தில், மனோகர், தாமோதரன், வெங்கடேசன், மஞ்சுளா, செண்பகவல்லி, சரசு, விஜயலட்சுமி, லட்சுமி, வாஜ்பாய், கோவிந்தன், குமார் உள்ளிட்ட தி.மு.க. நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.மாவட்ட தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் முருகன் அனைவருக்கும் நன்றி கூறினார்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

சி.எம்.இராமசாமி

மே 17 (1999)

இளம் வயதிலேயே கழகக் கொள்கையால் ஈர்க்கப்பட்டு, உறுப்பினராகி கழகப் பணியாற்றியவர்.

வடபெரும்பாக்கம் கிளைச் செயலாளராக மூன்று முறையும் – மாதவரம் ஒன்றிய துணைச் செயலாளராக இரண்டு முறையும் – மாவட்ட பிரதிநிதியாகவும் பொறுப்பு வகித்து கழகப் பணியாற்றியவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டவர். குறிப்பாக, மிசா சட்டத்தை கண்டித்து, கறுப்புக் கொடி காட்டும் போராட்டத்தில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.